## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri Lanka.

### முதலாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
### (மே/யூன் 2011)

### PS 101 அரசறிவியலுக்கோர் அறிமுகம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01. (i) அரசு என்ற பதத்திலிருந்து யாது விளங்குகின்றீர்.
    (ii) அரசியல் விஞ்ஞானத்திற்கும் ஏனைய சமூக விஞ்ஞானங்களுக்குமிடையிலான தொடர்பினை நுணுக்கமாக விளக்குக.

02. "இறைமை பற்றி ஜோன் ஒஸ்ரின் முன் வைத்த கருத்துக்கள் சமகாலத்திற்குப் பொருத்தமற்றதாகும்." பகுப்பாய்வு செய்க.

03. "அரசாங்க செயற்பாட்டிற்கு இறுக்கமான வலுவேறாக்கற் கோட்பாடு பொருத்தமானதல்ல" இக்கூற்றினை மொண்டஸ் கியூவின் வலுவேறாக்கற் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

04. (i) ஜனநாயகம் என்றால் என்ன?
    (ii) மேற்குத்தேச ஜனநாயகத்தின் பண்புகளையும் மூன்றாம் மண்டல நாடுகளின் ஜனநாயகத்தின் பண்புகளையும் ஒப்பீட்டு ஆராய்க.

05. "வரலாற்று பரிணாமத்தினால் இயற்கையாக வளரும் நிறுவனமே அரசாகும்." இக்கூற்றினைப் பகுப்பாய்வு செய்க.

06. (i) பிரதிநிதித்துவம் என்றால் என்ன?
    (ii) இலங்கையின் தேர்தல் வரலாற்றில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையினால் ஏற்பட்டு வந்துள்ள சாதக பாதக அம்சங்களை ஆராய்க.

07. (i) சட்டம் என்பதை வரையறை செய்க
    (ii) ஒரு நாட்டில் நல்லாட்சி நிலவ சட்டங்கள் எந்தவகையில் உதவுகின்றன என்பதை ஆராய்க.

08. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    (i) அரசியல் திட்டம்
    (ii) தாராண்மை வாதம்
    (iii) அரசாங்கத்தின் வகைப்பாடுகள்
    (iv) நீதித்துறைச் சுதந்திரம்

*********